நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையம் ஜல்லிக்கட்டு பேரவை சார்பில் நடத்தப்பட்ட ஜல்லிக்கட்டு போட்டியை கழக மாநில அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நாமக்கல் மேற்கு மாவட்ட கழக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் கொடியசைத்துப் போட்டியைத் துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க., திருச்செங்கோடு கிழக்கு, மேற்கு நகர தி.மு.க. சார்பில்

திராவிட மாடல் அரசின் 5 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி தலைமை - அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சிறப்புரை!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேருரை ஆற்றினார்!

நாமக்கல், பிப். 2 –

நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக மற்றும் திருச்செங்கோடு கிழக்கு, மேற்கு நகர திமுக சார்பில், திராவிட மாடல் அரசின் 5 ஆண்டுகால சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் மாபெரும் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் திருச்செங்கோடு நெல்லுகுத்தி மண்டபம் அருகில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு திருச்செங்கோடு மேற்கு நகர கழகப் பொறுப்பாளர் ஆர்.நடேசன் தலைமை தாங்குகினார். கிழக்கு நகர கழகப் பொறுப்பாளர் தா.கார்த்திகேயன் வரவேற்றார்.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேசும் போத, தமிழ்நாடு முழுவதும் திமுக மீது மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு காணப்படுகிறது. கடந்த ஆட்சியில் மக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்தனர். அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவே திமுக மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்க வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் வலுப்பெற்றுள்ளது.

திமுக ஆட்சியில் மக்கள் நலன் சார்ந்த பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு திமுக செயல்பட்டு வருகிறது. அதனால்தான் திமுக என்றாலே மக்கள் கட்சிஎன்ற அடையாளம் பெற்றுள்ளது.

மத்திய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக திமுக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. மாநில உரிமைகளை பறிக்கும் எந்த முயற்சியையும் திமுக ஒருபோதும் அனுமதிக்காது.

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி பெரும் வெற்றியை பெறும். அதன் மூலம் மீண்டும் தமிழ்நாட்டில் கழக ஆட்சி அமையும் என்பது உறுதி.

மொழி போராட்டம் நடைபெறாது இருந்திருந்தால் இன்றைக்கு தமிழ் நாட்டில் தமிழே இருந்திருக்காது இன்றைய மாணவர்கள் இளைய சமுதாயத்தினர் எப்படி இருக்கின்றார்கள் என்பதை பார்க்கிறோம்

மராட்டியத்திலே மராட்டிய படம் ஓடவில்லை இந்தி படம் தான் ஓடுகிறது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் போராடி இந்தி ஆதிக்கத்தை தடுத்து இருக்காவிட்டால் இந்தி படத்தை தவிர வேறு படங்கள் இங்கு ஓடாது. இளைய சமுதாயத்தினர் சிந்தித்துப் பார்க்க

வேண்டும். திமுக என்ன செய்தது, திராவிட இயக்கம் என்ன செய்தது என்று கேட்கிறார்களே அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்..

கருப்பு சிவப்பு கொடியும், திராவிட முன்னேற்ற கழகம் தான் காரணம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் மட்டும் போராட்டம் நடத்தாமல் இருந்திருந்தால் இங்கேயும் இந்தி படங்கள் தான் ஓடும் நிலை இருந்திருக்கும்.. 200 கோடி 300 கோடி என்று சம்பளம் வாங்குகிறார்களே அவர்கள் எல்லாம் இப்படி இந்த நிலைக்கு வந்திருக்க மாட்டார்கள். 200 கோடியை விட்டுவிட்டு வந்திருக்கிறேன் என்றெல்லாம் கூற முடியாது..

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் நான் முத்தமிழறி ஞர் கலைஞருடன் ஈடுபட்டேன்.. எம்ஜிஆர் அவர்கள் கொடியிலும், கட்சியிலும், பெயரிலும் அண்ணா படம் மட்டுமே போட்டார்,

தி.மு.க.வை அழிக்க முடியாது

எமர்ஜென்சியை பார்த்த கட்சி தான் திமுக. எமர்ஜென்சிஸ் தமயத்தில் கழக ஆட்சி கலைக்கப்பட்டவுடன் டெல்லிக்கு சேலம் ராஜாராம் இந்திரா காந்தியை சந்தித்து பேசுகிறார். அன்புக்கு வந்த அவர் முத்தமிழர்கள் கலைஞர் அவர்களை சந்தித்து இந்திரா காந்தி கோபமாக இருக்கிறார் நம்முடைய கட்சியை தடை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது மாநிலக் கட்சியை இருக்கக் கூடாது என்ற முடியை எடுப்பதாக இருக்கிறார். அதற்கெல்லாம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலங்கவில்லை. அந்த சமயத்தில் எம்ஜிஆர் பயந்து கொண்டு அதிமுக என்று ஆரம்பித்த கட்சி அனைத்திந்திய அண்ணா திமுக என பெயரை மாற்றினார். ஆனால் திமுக மிகவும் கம்பீரத்துடன் இருந்தது. எமர்ஜென்சி போராட்டத்தின் போது நானும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் கூடவே இருந்தேன்.

எமர்ஜென்சி நேரத்தில் கலைஞர் மட்டுமல்லாமல் தளபதி மு க ஸ்டாலின், முரசொலி மாறன் உட்பட பலரும் கைது செய்யப்பட்டனர்.

75 ஆண்டுகால வரலாற்றில் இந்தியாவிலேயே எந்த ஒரு அரசியல் கட்சியாவது தொடர்ந்து ஒரே சின்னத்தில் போட்டியிட்ட வரலாறு உண்டு என்று சொன்னால் அது திமுகவின் உதயசூரியன் மட்டும் தான். அப்போதிருந்த ஜனசங்கம் அணி கூட எமர்ஜென்சிக்கு பயந்து பெயர் பெயர் மாற்றி பிஜேபி என பெயர் மாற்றிக் கொண்டனர் .

இந்த இயக்கத்தை எவனாலும் தொட்டுப் பார்க்க முடியாது. திமுக காரன் ஒரு பிரச்சாரத்தை எடுத்து ஈடுபடுவானேயானால் ஒன்றும் செய்ய முடியாது,. இன்றைக்கு ஊடகங்கள் ஒருவரை தூக்கி பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.. ஒரே ஒரு முறை சிபிஐ விசாரணைக்கு போய் விட்டு அடங்கிப் போய்விட்டார்.. இந்த ஆட்சிக்கு எதிராக டெல்லி ஆதரவுடன் வந்துவிட்டு திமுகவை ஒழித்து விடுவோம் என்று கூறுகிறார். எவன் வந்தாலும் இந்த கட்சியை தொட்டுப் பார்க்க கூட முடியாது. திமுகவை அழிப்பேன் என்று சொன்னவனுக்கு எல்லாம் கல்லறை கட்டிய கட்சி திமுக.

திமுக இல்லை என்றால் இந்த நாடு என்ன ஆகி இருக்கும்.. இருமொழிக் கொள்கை இருக்கின்ற காரணத்தினால் தான். பிரதமர் நரேந்திர மோடிக்கு சொல்கிறேன். தமிழ்நாட்டில் இந்தியை நுழைய விடாமல் தடுக்கிறோம் இந்த மொழி படித்ததினால் தான் இந்த நாடு முன்னேறி இருக்கிறது., மோடிக்கும், அனுஷாவுக்கும், கல்வி அமைச்சராக இருப்பவருக்கும் வைராக்கியத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.. தமிழையும், ஆங்கிலத்தையும் படித்த காரணத்தினால் மட்டும் தான் உலகத்திலேயே அதிக சம்பளம் வாங்குகிறார் சுந்தர் பிச்சை.

நிலவுக்கு விண்கலத்தை அனுப்பியவர்களெல்லாம் அரசு பள்ளியில் படித்தவர்கள் தான். தமிழ் நாட்டில் உள்ள பொறியாளர்கள் தான் இந்தியாவுக்கு பெருமையைத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள். அம்பானி ஊரைக் கொள்ளை அடித்து உலகில் போடுகிறார். அவரது ஒவ்வொரு துறைமுகத்தின் வாயிலாகவும் போதைப் பொருள் கொண்டுவரப்படுகிறது. ஆனால் இங்கு வந்து போதைப்பொருள் நடமாட்டம் என பேசுகிறார்கள்.

எத்தனை அமைப்புகள் வந்தாலும், எத்தனை கட்சிகள் வந்தாலும் திமுகவை தொட்டுக் கூட பார்க்க முடியாது. திமுக சட்டத்துறை வலுவாக இருக்கிறது. சுதந்திரம் பெற்றது முதல் இதுவரை செய்யாத திட்டங்களை எல்லாம் தமிழ்நாடு முழுவதும் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி உள்ளார்கள்.

ஊழலைப் பற்றி மோடி பேசுகிறார் ஆனால் திரும்பிப் பார்த்தால் எடப்பாடி உட்கார்ந்து இருக்கிறார். எடப்பாடி மீது ஊழல் வழக்கு தொடர்ந்து சுப்ரீம் கோர்ட் சென்று தடை வாங்கியவர் தான் எடப்பாடி . அன்புமணி மருத்துவத் துறையில் முறைகேடு செய்தார் என மீது சிபிஐ விளக்கு போடப்பட்டுள்ளது. டிடிவி தினகரன் மீதும் மோடி அரசுதான் விளக்கு போட்டது அது மட்டுமல்லாமல் தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுத்ததாக கைது செய்யப்பட்டவரும் டிடிவி தினகரன் தான். இவர்களையெல்லாம் மேடையில் வைத்துக் கொண்டுதிமுகவை ஒழித்து விடுவேன் என மோடி பேசி வருகிறார்.

பாஜக தனது கூட்டணிக்கு வர வேண்டுமென ஒவ்வொரு கட்சியினரையும் மிரட்டி பணிய வைத்து வருகிறார்கள்.. ஜெயலலிதா இருந்த போது இந்த மோடியா அல்லது லேடியா என தைரியமாக கேட்டார்.. அப்படிப்பட்ட ஜெயலலிதாவின் அதிமுக கட்சி. தற்போது டெல்லி ஒன்றிய அரசுக்கு அடிமையாகி விட்டது. அவர்கள் சொல்வது எல்லாம் கேட்டு தலையாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.. இதையெல்லாம் பார்த்து அந்தக் கட்சியினரும், தொண்டர்களும் சிந்திக்க தொடங்கி விட்டனர்

ஜெயலலிதா ஆட்சியில் போராடிய அரசு ஊழியர்களை இரவோடு இரவாக கைலியோடு, நைட்டியோடு கணவன, மனைவி எனக் கைது செய்து கொண்டு போனார்கள். குழந்தைகள் எல்லாம் வெளியூரில் இருந்து கதறினார்கள். அன்று அரசு ஊழியர்களுக்கு ஆதரவாக வழக்கு போட்டது திமுக தான்.

பேரறிஞர் அண்ணா கட்சியை நடத்தி வந்த காலத்தில் கட்சிக்கென இடமில்லாமல் தான் இருந்தது. அந்த நேரத்தில் உடன் இருக்கும் நிர்வாகிகளுடன் பேசுவது என்றால் முக்கிய முடிவுகள் எல்லாம் கடற்கரையில் தான், மெரினா பீச்சில் தான் அமர்ந்து கலந்துரையாடுவார். அண்ணா மறைந்த போது எப்போதும் அமர்ந்து பேசிய இடத்தில்தான் அவரது உடலை அடக்கம் செய்ய வேண்டும் என சொல்லி மெரினாவில் அடக்கம் செய்யப்பட்டார். அதன் பிறகு கலைஞர் அவர்கள் 52 வயது இருக்கும்போது என்னையும் அண்ணாவுக்கு பக்கத்தில் தான் அடக்கம் செய்ய வேண்டும் என சொன்னார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் மறைந்த போது அப்போது ஆட்சி செய்த எடப்பாடி பழனிசாமியை தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் குடும்பத்துடன் சென்று தனது தந்தையை பேரறிஞர் அண்ணாவிற்கு பக்கத்தில்தான் அடக்கம் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தார் ஆனால் அதற்குபதில் வரவில்லை. இதை எடுத்து உயர்நீதிமன்றத்தை நாடி இரவோடு இரவாக போராடி மெரினாவில் அண்ணாவுக்கு பக்கத்தில் கலைஞர் அவர்களின் உடல் அடக்கம் செய்யப்பட்டது

பிரபல கருத்துக்கணிப்பு நிறுவனங்கள் எடுத்த சர்வே ப்படி தமிழ் நாட்டில் திமுக தான் அதிக தொகுதிகளில் வெற்றி பெற்று வாகை சூடும் என தெரிவித்துள்ளனர். அனைத்து தொகுதிகளிலும் கழக நிர்வாகிகள் ஒன்றுபட்டு பணியாற்றினால் தமிழ் நாட்டில் 200 தொகுதிகளுக்கு மேல் திமுக கூட்டணி தான் வெற்றி பெறும். 2026 தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும். தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் தான் இரண்டாவது முறையாக முதலமைச்சராக . அதற்காக கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டு அதற்கான பணியில் தீவிரமாக செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் . இறுதியாக நகர துணை செயலாளர் மு.ராஜ வேல் நன்றி கூறினார்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி கிழக்கு ஒன்றியம், பூம்புகார் மேலையூர் சீனிவாசா மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டிகளை மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் வழங்கி வெற்றி நிச்சயம் புத்தக கையேட்டினை வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து மகேந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பஞ்சு குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், அப்துல் மாலிக், அமிர்த விஜயகுமார், தரங்கம்பாடி பேரூர் கழக செயலாளர் முத்துராஜா, மற்றும் முத்து. தேவேந்திரன், திருவெண்காடு அறங்காவலர் குழு தலைவர் எம்.என்.ஆர். ரவி, பொதுக்குழு உறுப்பினர் ,நத்தம் வின்சென்ட், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் காளி.தேசப்பன், வைத்தி மற்றும் பலர் உள்ளனர்.

புதுக்கோட்டை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (புதுக்கோட்டை பிரிவு) சார்பில், முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா "இது நம்ம ஆட்டம் 2026 மாவட்ட அளவிலான போட்டிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் துவக்கி வைத்தார்கள். உடன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா அவர்கள், மாநகராட்சி துணை மேயர்எம்.லியாகத் அலி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கூ.சண்முகம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் து.செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

விரைவில் மூவர் குழு அறிக்கை வெளியிட இருக்கிறது – ஊதியப் பிரச்சினை சார்ந்த முடிவு எடுக்கப்படும்!

இடைநிலை ஆசிரியர்கள் பள்ளிக்குத் திரும்பி கற்பித்தல் பணியில் ஈடுபடவும்!

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

சென்னை, பிப்.2-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

விரைவில் மூவர் குழு அறிக்கை வெளியிடப்பட இருக்கின்றது. அதனடிப்படையில் இடைநிலை ஆசிரியர்களது ஊதியப்பிரச்சினை சார்ந்த முடிவு எடுக்கப் படும்.

போராட்டக்களத்தில் இருக்கும் ஆசிரியர்கள் பள்ளிக்கு திரும்பி கற்பித்தல் பணிகளில் ஈடுபடக் கேட்டுக் கொள்கின்றேன்.

இது நம்முடைய அரசு என முதல்வரின் மீது நம்பிக்கை வைத்து போராட்டங்களில் ஈடுபடாமல் மாணவர்களது கற்றல் பாதிக்கப்படாமல் பள்ளிக்குத் தொடர்ந்து சென்று கற்பித்தல் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

மொத்தமுள்ள இடைநிலை ஆசிரியர்களில் பள்ளிப் பணிகளுக்கு செல்லாமல் இருக்கின்ற 5781 ஆசிரியர்களையும் கற்பித்தல் பணிக்கு திரும்ப கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சேலம் கிழக்கு மாவட்டத்தில்

பேரறிஞர் அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சி!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கை!

சேலம்,பிப்.–

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

அறிவுலக மாமேதை திராவிட இயக்க ஆசான் தி.மு.கழக நிறுவனர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57–வது நினைவு நாள் பிப்ரவரி 3–ம் தேதி அனுசரிக்கப்படுகிறது. சமூக நீதி, மாநில உரிமை, மொழி உரிமை தொடர்பான சிந்தனையாளர், அந்த சிந்தனையை வெற்றிகரமாக அரசியல் படுத்தியவர். அப்படி அரசியல் படுத்துவதற்காக மேடை பத்திரிகை, நாடகம், சினிமா, நூல்கள் என்று எல்லா ஊடகங்களையும், கையில் எடுத்து அதற்குப் புதிய தோற்றமும், உள்ளடக்கமும் தந்தவர். கடமை – கண்ணியம் கட்டுப்பாடு எனும் தாரகமந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்ற தம்பிமார் பெரும்படையைக் கண்டு நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி நின்று அண்ணாவின் கொள்கைக் கோட்பாடுகளை துளியும் பிசகின்றி காத்து அவர் உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகப் பேரியக்கத்தை கோடிக்கணக்கான தொண்டர்களையும் அனுதாபி களையும் கொண்டு தலைவர் கலைஞர் அவர்கள் வழி நடத்தி வந்தார்கள். முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழிநின்று செயல்படும் கழகத் தலைவரும் தமிழ் நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுரைப்படி பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை ஒவ்வொரு கழக தொண்டனும் அனுசரித்திட வேண்டும்.

சேலம் கிழக்கு மாவட்டத்தில் 03–02–2026 திங்கள்கிழமை அன்று எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகிய எனது தலைமையில் வாழப்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகம் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் காலை 9 மணிக்கு அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் படுகிறது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள் ஒன்றிய குழு மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், நகர மன்ற தலைவர்கள், கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழக செயலாளர்கள், வார்டு செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பெரும் திரளாக பங்கு பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரி வித்துள்ளார்.

மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் பங்கேற்பு!

நாகையில் 2102 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்!

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்!

நாகை,பிப்.2–

நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் 2102 பயனாளிகளுக்கு ரூ.85.26 இலட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்.

நாகை மாவட்டம் திருமுருகல் ஒன்றியம் நரிமணம் ஊராட்சியில் சுள்ளங்கால் கிராமத்தில் நாகை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.15.35 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம், நாகப்பட்டினம் சிக்கல் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடை கட்டிடம், சிக்கல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் குழந்தைநேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.34.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடம் திறப்பு விழா மற்றும் நாகை நகராட்சிக்குட்பட்ட தாமரைக் குளத்தில் பொழுது போக்கிற்கான படகு சவாரி தொடக்க விழா, கல்வி தன்முனைப்புத் திட்டத்தில் இசை, நடனம், நாடகம் மற்றும் இசை கருவிகள் பயிற்சி மைய திறப்பு விழா, நாகை, வெளிப்பாளையம் அரசு மருத்துவமனை வளாகத்தில் ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான அவசர சிகிச்சை மற்றும் மீள் மையம் திறப்பு விழா ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிகழ்ச்சிகளுக்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் தலைமை தாங்கினார்.நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவருமான என். கௌதமன், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ் ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

நிகழ்ச்சியில் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி கலந்துகொண்டு நரிமணம் ஊராட்சியில் சுள்ளங்கால் கிராமத்தில் ரூ.15.35 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம், நாகை ஒன்றியம் சிக்கலில் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடை கட்டிடம், சிக்கல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ.34.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடம் ஆகிய வற்றை திறந்து வைத்தார்.

அதை தொடர்ந்து நாகை தாமரைக்குளத்தில் பொழுது போக்கிற்கான படகு சவாரியினை தொடங்கி வைத்து, நாகையில் கல்வி தன்முனைப்புத் திட்டத்தில் இசை, நடனம், நாடகம் மற்றும் இசை கருவிகள் பயிற்சி மையத்தை திறந்து வைத்தார். பின்னர் நாகை, வெளிப்பாளையம் அரசு மருத்துவமனை வளாகத்தில் ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான அவசர சிகிச்சை மற்றும் மீள் மையம் திறந்து வைத்தார்.

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 37 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.37 இலட்சத்து 66 ஆயிரம் மதிப்பிலான இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், 8 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 15ஆயிரம் 920 மதிப்பிலான இலவச திறன்பேசியினையும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3 இலட்சத்து 43 ஆயிரம் 200 மதிப்பிலான பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலியினையும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.19 ஆயிரம் மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட இலவச தையல் இயந்திரங்கள் என மொத்தம் 51 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.42 இலட்சத்து 44 ஆயிரம் 797 மதிப்பிலான நலத்திட்டங்களையும், அங்கு நடைபெற்ற விழாவில் 2102 பயனாளிகளுக்கு ரூ.85.26 இலட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கி சிறப்புரை யாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, மாவட்ட வருவாய் அலுவலர் .வ.பவணந்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கே.ஸ்ருதி, கழகத் தீர்மானக் குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராஜன், க.மறைமலை, மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், துணை செயலாளர் ரவிச்சந்திரன் கழக மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.டி.எஸ். சரவணன், செல்வ.செங்குட்டுவன், மகா குமார், சிக்கல் என். ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், நகர கழக செயலாளர்கள் இரா.மாரி முத்து, எம். ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் எல்.எஸ் ஈ. பழனியப்பன், திட்டச்சேரி பேரூர் செயலாளர் முகமது சுல்தான், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, இளம்.சுந்தர், எஸ். பால்ராஜ், ஆர்.ஆர். குலோத்துங்கன் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஷாஜகான், சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி கலையரங்கத்தில், தனியார் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் 1,806 மாணவ மாணவிகள் , பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி கலையரங்கத்தில், பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி மற்றும் பையூர் அரசு தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதியாண்டு பயிலும் 295 மாணவ மாணவியருக்கு "உலகம் உங்கள் கையில் என்னும் திட்டத்தின் கீழ், மடிக்கணினிகளை பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ,மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் சத்யபாமா ,பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.